# திருமலைத்தீபம்

**Thirumalaitheepam**

தீபம் – 81 வைகாசி Email: theepamlink@gmail.com TP: 026 222 1022/ 026 205 4362 Rs. 40/=


## ஆயரின் செய்தி



**கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இமானுவேல்**
**மறைமாவட்ட ஆயர்**

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
புதிய வருடத்தில் பல புதுப்புது சிந்தனைகளோடும் கனவுகளோடும் பயணிக்கின்றோம். இறை சித்தத்தோடு அவர் விருப்பமெல்லாம் எம் வாழ்வில் நிறைவேற ஆசிப்போம்.

கிறிஸ்து பிறப்புக்காலம் முடிந்து தவக்காலத்தினையும் நிறைவு செய்துவிட்டோம். திருவழிப்பாட்டு ஆண்டில் ஒவ்வொரு காலமும் சிறப்பான காலமாக திருஅவையால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அனைத்துக் காலங்களும் மனமாற்றத்திற்கும் ஒப்புரவிற்கும் அழைப்பு விடுக்கின்றன. அதிலும் சிறப்பாக தவக்காலத்தில் வரும் 46 நாட்களும் கிறிஸ்துவோடும் அவரது பாடுகளோடும் பயணிக்க ஓர் சிறந்த சந்தர்ப்பமாக அமைந்தன.

“தம் ஒரே மகனின் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வை பெறும் பொருட்டு

➩ 5

# திருகோணமலை

## மறைமாவட்ட ஆணைக்குழு, அப்போஸ்தலிக்கபணிகளின் நியமனங்கள்





அருட்பணி. போல்றொபின்சன் – எகெட், பல் சமயம், மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர், குருமுதல்வர்



அருட்பணி. கிங்ஸ்லி றொபட் – திருவழிபாடு



அருட்பணி. றெஹான் பேர்னாட் மறைக்கல்வி, விவிலியம்



அருட்பணி. டன்ஸ்டன் ப்ரெட்றிக் புனித வின்சன் டி பவுல்



அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் – பொதுநிலையினர்



அருட்பணி. மொறிஸ் OMI – புலம்பெயர்ந்தோர்



அருட்பணி. சுதர்ஷன் – பீடப்பணியாளர்



அருட்பணி. ஜொனத்தன் – மரியாயின் சேனை



அருட்பணி. றொப்சன் ஸ்பாக்ஸ் – திருப்பாலத்துவ சபை



அருட்பணி. [illegible]



அருட்பணி. [illegible] குருஸ் – சமூகத் தொடர்புகள்



அருட்பணி. அன்ரு ஸ்டீபன் – அருங்கொடை ப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழைகளேநீங்கள் பேறுபெற்றோர்!" என்று ஆண்டவர் இயேசு கூறினார். ஆனால் இன்று நம் அன்றாட வாழ்வில் பார்க்கும் போது, "ஏழைகளே நீங்கள் சபிக்கப்பட்டோர்!" என்றே கூறத் தோன்றுகின்றது. காரணம், இன்றைய நீதியற்ற சமுதாயத்தில் மிக அதிகமாக பாதிக்கப்படுவோர், இந்த ஏழைகளாகத்தான் இருக்கின்றார்கள். மிகுந்த பாதுகாப்பற்ற சூழலிலும், அதிகமாக வஞ்சிக்கப்படுபவர்களாகவும் இந்த ஏழை மக்கள் தான் இருக்கின்றார்கள். சற்று பணம் படைத்தவர்கள் இந்த இடிபாடுகளில் லாவகமாக தப்பித்துக் கொள்கின்றார்கள். நடுத்தரமான வாழ்வு வாழ்பவர்களும் ஏழைகளும் தான் சமுதாய அநீதிகளால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப் படுகின்றார்கள். இவர்களைப் பார்த்து இன்று ஆண்டவர் கூறுகின்றார். "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்!" என்று.

ஆண்டவர் இயேசுவின் பார்வையில் நாம் இந்த ஏழைகளைப் பார்த்தால், அவர்கள் நிச்சயமாகப் பேறுபெற்றவர்கள் தாம், அவரது பார்வையில் உள்ள ஏழைகள், இந்த உலகில் எத்தகைய அடிமை நிலைகளிலும் விழாதவர்கள், எத்தகைய தீமைகளிலும்

**இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!**

## இன்னுமா தயக்கம்

26



ஆண்டவர் இயேசு இத்தகையோரைப் பற்றியே, "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும், பணக்காரர் இறையரசில் நுழைய மாட்டார்கள்!" என்று கூறுகின்றார்.

ஒரு நாள் இரவு, இரண்டு பேய்கள், தங்கள் செயல்பாடுகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றன. முதல் பேய் கூறுகிறது. "நான் நேற்று இந்த ஊரிலேயே மிகப்பெரிய மனிதர் என்று அழைக்கப்பட்டவரை என் வலையில் விழ வைத்துவிட்டேன். இப்போது அவன் நான் காட்டிய

எப்படியாவது நிம்மதியற்ற மனிதனாக மாற்றிவிட வேண்டும் என்று முடிவு செய்கின்றன.

மறுநாள் அந்த மனிதன் தனது வயலில் சென்று வேலை செய்ய ஆரம்பிக்கின்றான். அவனுக்கு அவனது மனைவி காலை உணவு எடுத்து வருகின்றாள். வருகின்ற போது முதல் பேய் அவளது காலை இடறி விட அவள் கீழே விழுந்து கொண்டு வந்த உணவை கொட்டி விடுகின்றாள். இப்போது அவனுக்கு காலையில் சாப்பிட உணவு இல்லை. பேய்கள் அவன் கோபப்படுவான் என எதிர்பார்த்தன. ஆனால் அந்த மனிதன் வேகமாக ஓடி வந்து தன் மனைவியை தூக்கி விட்டுவிட்டு "பார்த்து வரமாட்டாயா, உனக்கு அடிபட்டால் என்னால் எப்படி தாங்கிக் கொள்ள முடியும்?" என்று சொல்லி அவளை கைத்தாங்கலாக அழைத்துச் செல்கின்றான். தனது காலை உணவு கீழே கொட்டிவிட்டது என்பதைப் பற்றி அவன் கவலையே கொள்ளவில்லை.

தங்கள் முதல் முயற்சி தோற்றுப் போய்விட்டதை நினைத்து முதல் பேய் மிகவும் சோர்ந்து போய்விட்டது. இரண்டாம் பேய், "கவலைப் படாதே, இன்னும் பல முயற்சிகள் இருக்கின்றன தளராமல் முயற்சி செய்!" என்று கூற இரண்டாம் முயற்சிக்கு அது தயாராகின்றது.

அந்த வருடம் அவனது வயலில் மிகுந்த விளைச்சல் அதைக்கண்டு அந்த மனிதன் மிகவும் மகிழ்ச்சி கொள்கின்றான். அவனது மனைவி, "நம் தேவைக்கு மேல் இருக்கும் தானியங்களை விற்று நம் வீட்டை இன்னும் பெரிதாகக் கட்டுவோம்" என்று கூறுகின்றாள். அவனும் வீட்டை பெரிதாக்குகின்றான் இப்போது ஒரு சில வேலைக்காரர்களை பணிக்கு அமர்த்துகின்றார்கள். சிறிய வயல் கொஞ்சம் கொஞ்சமாக பெரிதாகின்றது. விளைச்சல் மற்ற வயல்களில் இருப்பதை விட இவனது வயலில் மிக அதிகமாக இருப்பதால் இவனது விவசாய முறைகளை பலரும் பார்வையிட வருகின்றார்கள். பலர் தங்கள் வயலுக்கும் அந்த முறைகளை செய்வதற்கு இவனை அழைக்கின்றார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவனது புகழும் செல்வமும் உயர ஆரம்பிக்கின்றது. முதலில் ஒரு ஜோடி மாடுகளை வைத்து சிறிய காணியில் விவசாயம் செய்த அவன் இப்போது மிகப்பரந்த நிலப்பரப்பில் பல ஜோடி மாடுகளை வைத்து பல தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி விவசாயம் செய்கின்றான்.

# ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்

விழாதவர்கள் அதனால் எத்தகைய பிரச்சனைகளிலும் விழாமல் நிம்மதியாக வாழ்பவர்களாவர்.


ஆண்டவர் கூறும் ஏழைகள், இந்த உலகில் பணத்தை ஒரு பொருட்டாக மதியாதவர்கள். அவர்களுக்கு வாழ்வு பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வாய்ப்பு அல்ல, மாறாக மகிழ்ச்சியாக வாழவே வாழ்க்கை ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. அவர்கள் அதனால் யாரையும் தவறாகப் பயன்படுத்தத் தேவையில்லை எனவே யாரையும் அவர்கள் ஏமாற்றத் தேவையில்லை. இதன் காரணமாக அவர்கள் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை, தீமை செய்ய வேண்டிய ஏமாற்ற வேண்டிய திருட வேண்டிய பிறரை வஞ்சிக்க வேண்டிய தேவைகள் எதுவும் அவர்களுக்கு இல்லை. இதனால் அவர்களது மனம் தெளிந்த நீரோடையைப் போல் அமைந்துள்ளது. அதிலே மகிழ்ச்சியும் சமாதானமும் குடிகொண்டுள்ளது. எனவே ஆண்டவர் அவர்களைப் பார்த்து கூறினார். "நீங்கள் பேறுபெற்றவர்கள்!" என்று.

உண்மையில் இந்த உலகச் செல்வத்தின் பின் செல்பவர்கள் கானல் நீரைத் தேடிச் செல்லும் மானைப் போல ஓயாமல் ஓடிக் கொண்டே இருந்தும் எந்த மகிழ்ச்சியையும் அனுபவிக்காதவர்களேயாவார்.

பேராசை மாய வலையில் சிக்கி ஏறத்தாழ 10 குழந்தைகளை நரபலி கொடுக்கப் போகின்றான். அவன் உடன் இருக்கும் யாரையும் அவன் நம்ப முடியாமல் இருக்கச் செய்துவிட்டேன். அதனால் அவன் யார் நல்ல புத்திகளைக் கூறினாலும் கேட்கமாட்டான். இது எனக்கு ஒரு பெரிய சாதனை!" என்று. அதற்கு இரண்டாம் பேய் "இது என்ன சாதனை பணக்காரன் எப்போதுமே நமது அடிமை தான் அவனை வைத்து செய்யும் செயல் எல்லாம் பெரிய செயல் அல்ல. இப்போது நான் ஒரு மனிதனை சந்தித்து வருகின்றேன். அவன் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கின்றான். ஒரு சிறிய வயல் மட்டும் தான் அவனது சொத்து, ஆனால் அவன் எந்த கவலையும் இல்லாமல் இருக்கின்றான். அவனை கவலை கொள்ளச் செய்துவிடு, அப்போது நீ திறமைசாலி என ஒத்துக் கொள்கின்றேன்" என்கிறது. இப்போது முதல் பேய்க்கு அந்த மனிதனைப் பார்க்க வேண்டும் என்று அதீத ஆசை. இரண்டாம் பேய் அதன் ஆசையை நிறைவேற்ற அழைத்துச் செல்கின்றது. அந்த மனிதன் இரவில் தன் குடிசையில் மிகவும் அமைதியாக தன் மனைவியோடு அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கின்றான். அவனைப் பார்த்த பேய்கள் இரண்டிற்கும் மிகுந்த கோபமும் பொறாமையும் அவன் மீது ஏற்படுகின்றது. அவனை

கிணற்றிலிருந்து வயலுக்கு தண்ணீர் இறைத்து ஊற்றிக் கொண்டிருக்கின்றான். தண்ணீர் வாய்க்காலில் ஓடிக் கொண்டிருக்கின்றது. அவன் தண்ணீரை இறைத்துக் கொண்டே தன் வயலில் தண்ணீர் போதுமான அளவு சேர்ந்துவிட்டதா என பார்த்துக் கொண்டே இருக்கின்றான். ஆனால் வயலுக்கு தண்ணீர் வந்ததாகவே தெரியவில்லை. அவனது மனைவியும் அருகில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றாள். தண்ணீர் ஏன் வரவில்லை என்று வாய்க்காலை பார்க்கச் செல்கின்றான். அங்கே வாய்க்கால் ஒரு இடத்தில் உடைந்து தண்ணீர் வெளியே பாய்ந்து கொண்டிருக்கின்றது. இப்போதாவது அவன் தன் உழைப்பையெல்லாம் வீணாவதை பார்த்துக் கொண்டே இருந்த மனைவியிடம் கோபப்படுவான் என்று எதிர்பார்த்தது. ஆனால் அவன் மிகவும் அமைதியாக மண்வெட்டியை எடுத்துச்சென்று வாய்க்காலை சரி செய்துவிட்டு மீண்டும் தன் மனைவியிடம் இன்முகத்தோடு பேசிக் கொண்டே தண்ணீர் இறைக்க ஆரம்பிக்கின்றான்.

இப்போது இரண்டாம் பேய் "இவனை இப்படி நம் வழிக்கு கொண்டு வர முடியாது. நான் ஒரு வழியைக் கடைப்பிடிக்கின்றேன் பார்!" என்று சொல்லிக் கொண்டு செல்கின்றது.



அந்த வரும் அவனுடைய வயலில் தான் மிக அதிகமான விளைச்சல் அவன் தனது வெற்றியைக் கொண்டாட அந்த ஊரிலிருந்த அனைத்து பெருவிவசாயிகளையும் அழைத்து ஒரு மிகப் பெரிய விருந்து கொடுத்தான். பல பணக்கார பண்ணையாளர்கள் அந்த விருந்தில் கலந்து கொண்டிருந்தார்கள். இப்போது அந்த விருந்தினர்களுக்கு அவனது மனைவி பழ இரசம் கொண்டு வருகின்றாள். ஒவ்வொருவராக அவள் கொண்டு வந்த தட்டிலிருந்து பழ இரசம் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இறுதி குவளை பழ இரசத்தை ஒருவர் எடுக்கும் போது அவளது முகத்தில் ஒரு வண்டு வேகமாக வந்து மோதுகின்றது. அவள் தான் வைத்திருந்த தட்டிலிருந்து பிடியைத் தளர்த்துகின்றாள். அந்த பழ இரசக் குவளை கீழே விழுகின்றது. இதைப் பார்த்த அந்த மனிதன், "கொஞ்சம்

தொடர்ச்சி 3ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பத்திரிகையாசிரியரின் பேனா

உயிர்ப்பினால் உயிர் தந்த உத்தமன் இயேசுவின் உயிர்ப்பு விழா களிப்பில் உள்ள எமக்கு உயிர்ப்பின் செய்திகள் உரமூட்டுகின்றன.

அந்தவகையில் 2023ம் ஆண்டின் கால் ஆண்டு நிறைவடைந்த நிலையில் திருமலைத்தீபம் பத்திரிகை புதுப்பொலிவுடன் பொருள் கொடுக்கின்றான்.

திருமறைக்கல்வி நடுநிலையத்தை பொறுப்பெடுத்ததும் அனைத்து விடயதானங்களும் புதியனவாய் தோன்றின. புதிய பணியாளர்கள், புதிய முகங்கள். "எல்லா புகழும் இறைவனுக்கே" என்பதைப் போல் எல்லாம் இறைவன் சித்தம் என எடுத்துக் கொண்டோம். தீமையிலும் நன்மை உண்டு என்பது வாழ்வின் யதார்த்த உண்மைகள். எந்த கட்டுப்பாடுகளோ, சொல்வதை செய்துவிட்டுப் போவதோ, இறுக்கங்களோ இல்லாது புதிதாய் சிந்திக்க, புதிதாய், இலகுவாய், இயல்பாய், புத்தாக்கங்களோடு திருமறைக்கல்வி செயற்திட்டங்களை முன்னோக்கி நகர்த்த ஆண்டவன் தந்திருக்கின்ற அரியசந்தர்ப்பமாய் புதிதாய் பயணிப்போம்.

அதாளபாதாளத்திற்கு சென்றுகொண்டிருந்த நாட்டை ஒருவாறாக தடுத்து நிறுத்தியிருக்கின்றார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதாளபாதாள நிலைமைக்கு கொண்டு சென்றவர்கள் யார் என்பதை இந்த உலகமே அறியும். ஆனால் தடுத்து நிறுத்தியவர்கள் என்று பார்க்கையில் புதிய ஜனாதிபதி ரணிலுக்கு அவரின் தந்ரோபாய வியூகங்களுக்கும் பாராட்டுத்தெரிவித்தே ஆகவேண்டும். இருப்பினும் பாரிய பஞ்ச வேளையில் தூக்கிவிட்ட நாடுகளையும் மற்றும் சர்வதேச நிதிநிறுவனங்களையும் மறந்துவிடமுடியாது. குறிப்பாக பங்களாதேஷ் நாடானது ஆசியாவிலுள்ள வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக இருந்தும்; வழங்கிய 200 மில்லியன் டொலரை மீள பெறுவதற்கான காலவரையறையையும் நீடித்திருப்பது உண்மையில் மெச்சவேண்டிய விடயமாகும். எமது நாட்டின் மீட்சிக்காக விசேடமாக செபிப்போம்.

எமது உலகளாவிய மேய்ப்பனான திருத்தந்தை பிரான்சிஸ் அடிகள் அண்மை நாட்களில் தனது முதுமை நிலையில் உடல் சோர்வுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்து மீண்டும் தனது பணிகளை ஆரம்பித்துள்ளார் என்பதை அறிந்திருப்போம். திருத்தந்தைக்காக செபிப்போம். வைகாசி மாதம் 7ம் திகதி எமது முன்னைநாள் ஆயரின் 40வது ஆயர்த்துவ தினமாகும். முதுமை நிலையில் அவ்வப்போது நோய்வாய்ப்படும் முன்னைநாள் ஆயர் பேரருட்திரு. ஜோ. கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகைக்காக மன்றாடுவோம். எமது ஆயர் பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களின் 37வது குருத்துவ தினம் 21.05.2023 அன்று ஆகும். எமது ஆயர் எமது மறைமாவட்டத்தில் முன்னெடுக்கும் ஆன்மீகப்பணி, கல்விப்பணி மற்றும் சமூகப்பணிகள் செவ்வனே முன்னோக்கிச் செல்ல எமது ஆயருக்காகவும் செபம் செய்வோம். அத்தோடுகூட முதுமை நிலையில் உள்ள எமது மறைமாவட்ட குருக்களும் அவ்வப்போது நோய்வாய்ப்பட்டுள்ளனர். அவர்களையும் எமது செபத்தில் நினைவு கூறுவோம். ஆண்டவரின் அருட்துணை உங்களோடு தங்குவதாக.

ஆசிரியர்
அருட்பணி. றொஹான் பேர்ணார்ட்


# புனித மரியாள் பேராலய

## பீடப்பணியாளர்களுக்கான தவக்காலத்தியானம்



கடந்த 02.03.2023 ஞாயிறு அன்று புனித மரியாள் பேராலயத்தில் பீடப்பணியாளர்களுக்கான தவக்காலத்தியானம் காலை 7.00 மணி திருப்பலியுடன் ஆரம்பமானது. இத்திருப்பலியை பீடப்பணியாளர்கள் சிறப்பித்தார்கள். அன்றைய தினம் பங்குத்தந்தை அருட்பணி ஜோ. டன்ஸ்டன் பீடப்பணியாளர்களின் பெற்றோர்களை சந்தித்து "தேவ அழைத்தல்" பற்றி சிந்தனை வழங்கினார்.

பீடப்பணியாளர்களின் 'நம்பிக்கை வாழ்வு' பற்றியும் 'பொறுப்புகள்' பற்றியும் அருட்சகோதரர் லோறன்ஸ் சிந்தனை வழங்கினார். திரு. பெலிசியன் பீடப்பணியாளர்களுக்கான 'ஒழுக்கம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். மேலும் விவிலிய வாசிப்பு, நற்கருணை சந்திப்பு, ஒப்புரவு அருட்சாதனம் என்பன இடம்பெற்றன. தேவ அழைத்தலுக்கான காணொளி காண்பிக்கப்பட்டது. பீடப்பணியாளர்களின் பெற்றோர்களின் முழு ஒத்துழைப்புடன் மதிய உணவு தயாரித்து வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



இதனை ஒழுங்கு செய்ய அனுமதியளித்த பங்குத்தந்தை அவர்களுக்கும், தியானத்தை ஒழுங்கு செய்த அருட்சகோதரர் அவர்களுக்கும் பீடப்பணியாளர்களின் அன்புகலந்த நன்றிகள். மீளாய்வுடனும், நன்றி செபத்துடனும் இந்நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன. இதில் 33 பீடப்பணியாளர்கள் பங்குபற்றி பயனடைந்தார்கள்.

தகவல்: பீடப்பணியாளர்கள்
புனித மரியாள் பேராலயம்
திருகோணமலை

**"இம்மாத மேற்கோள்கள் கௌதம புத்தரின் சிந்தனைகளிலிருந்து"**

## இன்னுமா தயக்கம் தொடர்ச்சி...

கூட உனக்கு பொறுப்பே இல்லையா" என்று கோபப்பட்டு தன் மனைவியை கன்னத்தில் அறைகின்றான். தேவைக்கு அதிகமாகவே பழ இரசம் இருக்க, ஒரே ஒரு குவளை கீழே விழுந்ததற்காகவா இவன் இப்படிக் கோபப்படுகின்றான் என்று அதிர்ச்சியில் அந்த மனைவி உறைந்து நிற்கின்றாள். அவன் மீண்டும் தன் மனைவியின் பக்கம் திரும்பி, "உனக்கெல்லாம் கொஞ்சம் கூட அறிவே இல்லையா? இப்படி பழ இரசத்தைக் கொட்டி விட்டு பார்த்துக் கொண்டிருக்கின்றாய் வேகமாக இந்த இடத்தை சுத்தம் செய்து விட்டு இன்னொரு குவளை பழ இரசம் கொண்டு வா!" என்று கோபமாகக் கத்துகின்றான்.

இவனது செயலைப் பார்த்த முதல் பேய், "இது எப்படி சாத்தியமானது அவன் ஏழையாக இருந்த போது அவன் மனைவி இருந்த கொஞ்ச உணவையும் கீழே கொட்டியபோது இருந்த மனநிலை இப்போது இவ்வளவு மிகுதியாக பொருட்கள் இருக்கும் போது இல்லையே, ஏன்?" என்று கேட்கின்றது.

அதற்கு இரண்டாம் பேய், "முதலில் அவன் ஏழையாக இருந்தான் அவனுக்கு தான் வைத்திருந்த பொருட்களை விட தன் மனைவி பெரிதாக தெரிந்தாள், எனவே அவளை அவன் மற்றெல்லாவற்றையும் விட அதிகமாக அன்பு செய்தான். ஆனால் இப்போது அவன் பணக்காரனாகி விட்டான். எனவே இப்போது தன்னிடம் இருக்கும் செல்வத்தைத்தான் அவன் பெரிதாக மதிக்கின்றான். எனவே தன்னோடு இருக்கும் சக மனிதர்களை அவன் பயன்படுத்தும் நோக்கில் தான் பார்ப்பான். அவனுக்கு அவர்களை அன்பு செய்யத் தெரியாது அவனது அன்பெல்லாம் அவனது சொத்திலும் பணத்திலும் தான் இப்போது இருக்கும்!" என்று கூறியதாம்.

அன்பார்ந்தவர்களே, இதுவே வாழ்க்கையின் நியதி, நாம் பொருட்களை அதிகம் மதிக்க ஆரம்பித்துவிட்டோம் என்றால் நம் உறவுகள் நமக்கு முக்கியமற்றவர்களாகி விடுகின்றார்கள். ஆனால் நம் உறவுகளுக்கு நாம் முக்கியத்துவம் தர ஆரம்பித்தால், நமது பொருட்கள் நமக்கு முக்கியமற்றவையாகிவிடுகின்றன. உறவுகள் முக்கியமாக இருக்கும் வரை நாம் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். உறவுகள் முக்கியமற்றவையாகி பொருட்கள் முக்கியமானவையானால் நாம் மற்றவர்களை எதிரிகளாகவும் போட்டியாளர்களாகவுமே பார்க்க ஆரம்பிக்கின்றோம். நமது நிம்மதி நம்மை விட்டு வெகுதூரம் போய்விடுகின்றது.

எனவே புரிந்து கொள்வோம், "எளிய மனத்தோர்" என்றுமே பேறுபெற்றவர்கள் தாம்!

**இறையாசீருடன்**
**அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா**

**நிம்மதிக்கான இரண்டு வழிகள் விட்டுக்கொடுங்கள் இல்லை விட்டு விடுங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "இதை என் நினைவாய் செய்யுங்கள்"

அந்த நகரில் வாழ்ந்து வந்த ஒரு கிறிஸ்தவப் பெண்மணிக்கு நற்கருணையின் மீது நம்பிக்கையே கிடையாது. குறிப்பாக இயேசுவின் வார்த்தைகளான எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர் என்பதை அவரால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை அது எப்படி ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடைய உடலையும் இரத்தத்தையும் உண்பது? அப்படி உண்பது நர மாமிசம் சாப்பிடுவது போன்றது ஆகாதா? என்று பலவாறாக யோசித்தார்.

அப்படிப்பட்ட பெண்மணி ஒரு நாள் தன்னுடைய நான்கு சக்கர வாகனத்தில் பயணம் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக விபத்திற்குள்ளானார். விபத்தில் அவருக்கு தலையில் சரியான காயம் ஏற்பட்டு இரத்தமெல்லாம் வெளியேற மயக்கம் போட்டு விழுந்தார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தான் அவரை தூக்கிக்கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவமனையில் அவருடைய உடலில் இரத்தம் ஏற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருடைய உடலில் இரத்தம் ஏற ஏற அவர் தெளிவுபெற்று கண்திறந்தார்.

அப்போது அவர் நடப்பதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கினார். யாரோ ஒருவருடைய இரத்தம் தனக்கு வாழ்வு கொடுக்கும் போது எல்லாம் வல்ல இயேசுவின் இரத்தம் எப்படி வாழ்வு கொடுக்காமல் இருக்கும்? என்று சொல்லி அன்றிலிருந்தே அவர் இயேசுவின் வார்த்தைகளின் மீதும் நற்கருணையின் மீதும் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார். ஆம் நற்கருணை வெறும் சாதாரண உணவு மட்டும் கிடையாது. அது வாழ்வு கொடுக்கும் உயிருள்ள உணவு.



பெரிய வியாழன் என்பது திருஅவையின் வரலாற்றில் மிகவும் சிறப்புமிக்க நாள். ஏனென்றால் இன்றைய நாளில் தான் ஆண்டவர் இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தினார், இன்றைய நாளில் தான் இயேசு தன்னுடைய சீடர்களின் பாதங்களைக் கழுவினார். இதைவிடவும் இன்றைய நாளில்தான் இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார். "நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் உச்சமும்" என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் சொல்கிறது. ஆம் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்விற்கான எல்லா ஆசிரையும் அருளையும் நற்கருணையிலிருந்தே பெறுகின்றோம். இந்த நற்கருணையை ஆண்டவர் இயேசு தான் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவினில் ஏற்படுத்தினார்.

கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் திருமுகத்தில் பவுலடிகள் கூறுவார். ஆண்டவர் இயேசுவிடமிருந்து எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். என்று சொல்லிவிட்டு இயேசு நற்கருணையை ஏற்படுத்தியதை குறித்துப் பேசுவார். அதன் பின்னர் "நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்" என்பார். ஆகவே, நாம் ஒவ்வொருவரும் ஆண்டவருடைய திருவிருந்தில் பங்குகொள்கிற போதும் "இதை என் நினைவாய் செய்யுங்கள்" என்று சொன்ன இயேசுவின் வார்த்தைகளை நாம் நிறைவேற்றுபவர்கள் ஆகின்றோம்.



தொடக்க கிறிஸ்தவர்களின் வாழ்க்கையை நாம் படித்துப் பார்க்கும்போது அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். என்று அறிகின்றோம். அவர்கள் இத்தகையதோர் வாழ்க்கையை வாழ்ந்ததைப் பார்த்துத் தான் மக்கள் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார்கள். ஆகையால், ஆண்டவர் இயேசுவின் திருவிருந்து என்றென்றைக்கும் நினைவு கூர்ந்து கொண்டாடப்பட வேண்டியதொன்றாக இருக்கின்றது.

கிறிஸ்தவம் உள்ளே நுழைவதற்கு மிகவும் சவாலாக இருந்த நாடுகளில் ஒன்றான சீனாவில் நற்கருணை விருந்து எப்படி கொண்டாடப்பட்டது என்பதற்கான ஒரு வரலாற்றுச் செய்தி உண்டு. அங்கு மறைப்போதகப் பணியாற்றிய குருவானவர் ஒருவர் ஒரு கடைக்காரரைப் போன்று வேடம் தரித்து இருப்பார். அங்கு வரக்கூடிய மனிதர்களில் அவர்கள் வெளிப்படுத்தும் ஒருவிதமான சைகைகளைப் புரிந்துகொண்டு இவர்கள் கிறிஸ்தவர்கள் தான் என அறிந்து கொண்டு ஒரு சோப்புக் கட்டியை அவர்களுக்குத் தருவார். அதில் நற்கருணையானது இருக்கும் அதைப் பெற்றுக் கொள்ளும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய இல்லங்களுக்குச் சென்று இறைவேண்டல் செய்துவிட்டு நற்கருணையை உண்பார்கள். இவ்வாறு அவர்கள் நற்கருணையை உண்டு ஆண்டவர் இயேசுவுக்கு சான்று பகர்ந்து வந்தார்கள்.

இந்த இடத்தில் நாம் இன்னொரு செய்தியைப் புரிந்து கொள்ளவேண்டும். அதுதான் நற்கருணையை வெறுமனே ஒரு சடங்காக, வழிபாட்டுக் கொண்டாட்டமாக மட்டும் பார்க்காமல் அது நம்முடைய வாழ்விற்கான அடையாளம் எனப் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் ஆண்டவர் இயேசு தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் மானுட மீட்பிற்காகத் தந்தார். அவர் எப்படி மானுட மீட்பிற்காக தன்னையே தியாகமாகத் தந்தாரோ அது போன்று நாம் ஒவ்வொருவரும் நம்மையே நம்மிடம் இருப்பதையே தியாகமாகத் தரவேண்டும் அதைத்தான் நாம் ஒவ்வொருநாளும் கொண்டாடும் நற்கருணைத் திருவிருந்து நமக்கு நினைவூட்டுகிறது. உண்மையிலே நாம் இயேசுவைப் போன்று தியாக உள்ளத்தோடு வாழ்கிறோமா என சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நற்கருணை உட்கொள்கிறபோது நம்முடைய மனதில் இருத்த வேண்டிய இன்னொரு செய்தி நாம் ஒவ்வொருவரும் நம்மோடு இருப்பவர்களுக்கு பணிவிடை செய்து வாழவேண்டும் என்பதாகும். ஒத்தமை நற்செய்தி நூல்களான மாற்கு, மத்தேயு, லூக்கா நற்செய்தி நூல்களில் இயேசு நற்கருணையை நினைவுகூறுகின்ற போது யோவான் நற்செய்தியிலோ ஆண்டவர் இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்றார். நற்கருணை விருந்தில் பங்குகொள்கிற நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் பாதங்களைக் கழுவி அவர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டும். என்பதுதான் இயேசு நமக்கு உணர்த்தும் செய்தியாக இருக்கின்றது. பாதங்களைக் கழுவுவது எல்லாராலும் செய்ய முடியாது. அது உள்ளத்தில் உண்மையான அன்பு வைத்திருப்பவரால் மட்டுமே செய்ய முடியும். இயேசு சீடர்கள்மீது, நம்மீது உண்மையான அன்பு கொண்டிருந்தார். அதனாலேயே சீடர்களின் பாதங்களைக் கழுவினார். நாமும் நம்மோடு வாழக்கூடிய சகோதர சகோதரிகளிடத்தில் அன்பு கொண்டு வாழ்வோம். இயேசுவின் தியாக உள்ளம், உண்மையான அன்பு, தாழ்ச்சி இவற்றை நாமும் கொண்டு வாழ்வோமாக அதன் வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

**மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்,**
**பாளையம் கோட்டை மறைமாவட்டம்**

**இந்த உலகில் எப்போதும் நிலைத்திருக்கும் சக்தி உண்மைக்குத் தான் உண்டு.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ஆயரின் செய்தி தொடர்ச்சி ...**

உலகின்மேல் அன்பு கூர்ந்தார்” யோவா 3:16 இறைவனின் மதிப்பிட முடியாத அன்பையும் இரக்கத்தையும் இயேசு தனது இவ்வுலக வருகை, வாழ்வு, பாடுகள், மரணத்தால் வெளிப்படுத்தினார். உலகம் இறைவனோடு ஒப்புரவாக வேண்டும் என்பதற்காகவே இயேசு தன்னை அர்ப்பணித்தார். தனது அழைப்பு, பணி, பணிவு, கீழ்ப்படிதல் (காண் பிலி 2:6 - 8) என்பதில் இயேசு தெளிவாகவும் மிக உறுதியாகவும் கடைசிவரை இருந்து உலகிற்கே மீட்பைத் தந்தார். இதில் திருமுழுக்குப் பெற்றவராக எனது கடமை, பங்களிப்பு, பணி என்ன என்பதில் நாம் தெளிவாக இருந்து செயல்பட வேண்டும்.

கடந்துவந்த தவக்காலத்தில் பங்குகளாகவும் மறைமாவட்டமாவும் பல வழிபாட்டு வழிகாட்டல் ஆயத்தங்களை நாம் ஒழுங்கு செய்தோம். பங்கு மட்டங்களிலும் ஆணைக்குழுக்களாகவும் தவக்காலத் தியானங்கள் நடைபெற்றன. திருச்சிலுவைப் பாதைத் தியானம், விசேட ஆராதனைகள், திருப்பலி, ஒப்புரவு அருட்சாதனம், புனித வரா வழிபாடுகள், திருத்தைலம் மந்திரிக்கும் சடங்கு என பல வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. அனைத்திலும் நாம் பங்குபற்றியிருக்கலாம். ஆனால் மனமாற்றம், ஒப்புரவு என்பது எனக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள உறவு. மனமாற்றம் இருந்தால் அது ஒப்புரவிற்கு இட்டுச்செல்லும் வழமைபோல இத்தவக்காலத்தையும் கடந்து விட்டோம் எனும் மனநிலையோடு பயணித்தால் அது நாம் எம்மையே ஏமாற்றிக்கொள்வதற்குச்சமம். ஆகவே ஒவ்வொரு காலத்தையும் இறைவனின் கொடையாக ஏற்று தரப்படும் வாய்ப்புக்களை உணர்ந்து பயனடைவோம். ஆடம்பரம் வேண்டாம், வெளிவேடம் வேண்டாம், உண்மையான மனமாற்றமே வேண்டும். அதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் பங்கேற்போம். மன்னிக்கவும் மன்னிப்புக் கேட்கவும், ஒப்புரவாகவும் ஒப்புரவிற்கு திறந்த மனதோடு அழைக்கவும் நானே முதலாளாய் இருக்க வேண்டும். உறுதியோடு பயணிப்போம். இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்வில் பங்கேற்கும் நாம் உயிர்ப்பின் நிகழ்வுகள் எம்வாழ்வில் பிரதிபலிக்க தொடர்ந்து பயணிப்போம்.

இவ்வாண்டு பொதுநிலையினர் ஆண்டாகப் பிரகடனம் செய்து பயணிக்கின்றோம். பொதுநிலையினராக உங்கள் திருமுழுக்கு, அழைப்பு, பொறுப்பு, சந்தர்ப்பங்களை உணர்ந்து செயல்படத் தூண்டும் காலமிது அன்பியங்கள் இதற்கு சிறந்த சந்தர்ப்பம். இங்கு அனைவரும் உள்வாங்கப்படுகின்றனர், பகிர சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றன, ஒன்றித்து வாழ தளம் அமைக்கப்படுகின்றது. பொதுநிலையினரை சிறு குழுக்களாக, பங்குச் சமூகமாக சந்தித்து உரையாட நாம் பல முயற்சிகளை மேற்கொண்டு செயல்படுகின்றோம்.

தேவைப்பட்டால் இதே சிந்தனையை 2024ம் ஆண்டும் எடுத்துச் செல்வோம். அனைத்துக் குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினரின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

இறைவனின் ஆசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

# குடும்ப வாழ்க்கை ஒரு புரிந்து கொள்ளல்

“குடும்பங்களுக்கு நீர் செய்து வரும் எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுடனும் அன்புடனும் உம் திருப்பாதத்தில் பணிந்து வீழ்கின்றோம்.”

குடும்ப வாழ்க்கை என்பது இறைவன் எமக்கு தந்த ஒரு அன்பளிப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ் வாழ்க்கையில் நான் உயிருடன் இருக்கின்றேன் என்பது “அதிசயங்களில் பேரதிசயம்” இவ் அதிசய வாழ்வில் குடும்ப வாழ்க்கையை புரிந்துணர்வோடு வாழ வேண்டும்.

“ஒரு ஆணும் பெண்ணும் மனம் ஒருமித்து ஒருவருக்கு ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும் முறிவுபடாத பிரிக்க முடியாத உடன்படிக்கையில் இணைவது தான் திருமணம்.

“கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' (மாற்கு 10:9) தற்காலத்தில் திருமணங்கள் முடித்து ஓராண்டு அல்லது சில வருடங்களில் முறிவுபடும் தன்மை காணப்படுகின்றது. இதற்கு காரணம் என்ன? இதனை நாம் சற்று சிந்தித்து பார்த்தது உண்டா? ஆம் கணவன் மனைவி இருவருக்கும் இடையே உள்ள புரிந்துணர்வு காணப்படாத தன்மையே இதற்கு காரணம் என கூறலாம்.

இவ்வாறான புரிந்துணர்வு ஏற்படாத சந்தர்ப்பங்களை நாம் சற்று சிந்தித்து பார்போம்.

1. “இன்றைய சூழ்நிலையில் பணம் தான் வாழ்க்கை” கணவன் பணம் சம்பாதிக்கும் நோக்கில் தனது வேலையில் முழு கவனம் செலுத்தும் போது மனைவி தன்னோடு சிறிது நேரம் கதைக்க மாட்டாரா என்ற கவலை ஏக்கம். தற்போது மனைவியும் வேலைக்கு செல்லல், வீட்டிற்கு வேலைப் பணிப் பெண் அமர்த்துதல் இங்கு கணவன் மனைவி மீது ஏக்கம் இங்கு இருவரின் ஏக்கத்தின் மூலமே பிரச்சனைகள் உரு எடுக்கின்றது.



இதனை இருவரும் புரிந்துகொண்டு சில நேரங்களில் ஒன்றாக இருந்து சாப்பிடுதல், மாலையில் கூடி இருந்து கதைத்தல் மனம் விட்டு கதைக்கும் போது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சி செய்யலாம்.



2. “இணையவழி மோகம், தொலைத் தொடர்பு சாதனங்களின் பாரிய வளர்ச்சி” இன்று கணவன் மனைவி இருவரிடமும் கையடக்கதொலைபேசி, கணவன் ஒரு பக்கம் மனைவி ஒரு பக்கம் இருந்து தொலைபேசி பார்த்தல், கதைத்தல் அல்லது தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் நாடகங்களில் மூழ்கி கிடத்தல் இதன் காரணமாக குடும்பங்களிடையே பிளவுகள் ஏற்படுகின்றன. இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும் போது யார் சரி? யார் தவறு? என்ற போட்டி மனப்பான்மையில் சண்டையை நீட்டிக்கொண்டு இருக்காமல் யாராவது ஒருவர் உடனே முற்றுப்புள்ளி வைப்பது வாழ்க்கையை இனிமையாக தொடர்கதையாக்கும்.



3. “குடும்ப வாழ்வில் உள்ள தாம்பத்திய உறவு” இன்று பெண்கள் காலை தொடங்கி மாலை வரை வீட்டு வேலை, அலுவலக வேலை இவ்வாறு வேலை.. செய்து களைத்து வியர்வை சிந்தி உடல் களைப்போடு படுக்கறையை நோக்கி... கணவன் வேலை முடித்து களைப்போடு படுக்கறையை நோக்கி... கணவன் மனைவி இருவரில் ஒருவர் தாம்பத்திய உறவில் அதிகம் நாட்டம் உள்ளவராக இருந்து மற்றொருவர் அந்த நாட்டத்திற்கு இணையாக இல்லாத போது பிரச்சனை பூதகரமாக எழுகின்றது. வியர்வையோடு மனைவி உறங்கும் போது எந்த கணவனுக்கும் விருப்பம் வராது மனைவியை தள்ளிவிட தான் தோன்றும். மனைவி உறங்கும் போது சற்று தூய்மையாக இருக்கும் போது... கணவன் வேலைப்பளு காரணமாக உறங்கலாம் என நினைக்கும் போது மனைவியின் ஏக்கத்தை புரிந்துக்கொள்ளும் போது விரிசல் குறையும் புரிந்துணர்வு கூடும்.

4. “அந்தரங்கத்துக்கும் அன்புடன் நேரத்தை ஒதுக்குவது காதலை வெல்லும் வழி” எனவே நம் வாழ்க்கை நம் கையில் தான் உள்ளது. எமக்குள் இருக்கும் இந்த வாழ்வு இறைவன் தந்த அழகான பரிசு என்பதை உணர்ந்தவர்களாக சிறு சிறு பிரச்சனைகள் எழும்போது புரிந்துணர்வோடு வாழும் போது வாழ்க்கை வசந்தமாக மாறும். வாழ்க்கை ஓர் அன்பளிப்பு அதை நான் புரிந்துகொள்ள விரும்புகிறேன். புரிந்துகொள்ளும் ஆற்றலை நான் இழக்கும் முன் எனது வாழ்வுதான் விலைமதிப்பற்றது என்பதை நான் புரிந்துகொள்ள விரும்புகின்றேன். (பிரேம் ராவட்)

நாம் புரிந்து கொண்டு வாழ்வை வாழும் போது இணைப்பிரியா குடும்பமாக வாழ்வோம் என்பதில் ஐயமில்லை.

**திருமதி. சுதத் ரமேஸ்குமார் ரோஸ்மேரி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# ரீன்- ஏஜ் பருவத்தில் ஏன் தற்கொலை உணர்வு அதிகம்

ரீன் - ஏஜ் பருவத்தினர் மற்றவர்களுடன் இணைந்து பழகுவதில், பணியாற்றுவதில் வாழ்வதில் சிறந்து விளங்க வேண்டுமென்றால் அடிப்படையில் தாங்கள் யார்? எத்தகைய குணமுடையவர்கள்? தங்கள் பலம், பலவீனம் என்ன? தங்களைப்பற்றி எத்தகைய அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

இப்பருவத்தில்தான் உடலிலும் மனதிலும் நிறைய மாற்றங்கள் ஏற்படத் தொடங்குகின்றன. Puberty எனச் சொல்லப்படுகின்ற இக்காலக்கட்டத்தில் ஹோர்மோன்கள் சுரக்க... பாலியல் ரீதியாக வளர்ச்சியும், வித்தியாசமும் ஏற்படுகின்றது. சிறுமிகள் இப்பருவத்தை 11, 12 வயதிலே கூட அடைகின்றார்கள். சிறுவர்களுக்கு 13 வயதாகின்றது இதை முற்பட்ட வளரினம் பருவம் எனலாம். (11 - 14 வரை ) நியூமேன் கூறுவது போல இப்பருவக்காலத்தில் உடல் வளர்ச்சியுடன், நண்பர்கள் கூட்டத்தில் சேருவது, வேற்றுப்பாலாரோடு உறவு தொடங்குதல், எனப் புதிய சமூக உளவியல் நிலை தொடங்குகின்றது

எல் கோல்பர்க் என்ற அறிஞர் “நல்ல பிள்ளை, நல்ல மாணவன், மாணவி என்ற பெயரெடுப்பதும், ஒழுங்கு விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வாழ்வதும் கூட ரீன் - ஏஜ் பருவத்தினருக்கே உரிய பண்பாடு” என்பார். ஆச்சரியம் என்னவென்றால் தற்கொலை செய்வது கூட இவர்களின் பதட்டம் மற்றும் பக்குவமின்மையின் வெளிப்பாடுதான், 15 - 19 வயது பிரிவினரிடையே தற்கொலை செய்வோரின் எண்ணிக்கை (1960ல் இருந்து 1986 வரை) 16% அதிகரித்துள்ளது. என Statical Abstract of the united Stalers 1990 குறிப்பிடுகின்றது.

இன்று எமது நாட்டை எடுத்துக்கொண்டால் நாம் 1996ம் ஆண்டில் உலக சாம்பியனாக கிரிக்கெற் உலகில் திகழ்ந்தோம். இந்த ஆண்டு 2011ம் ஆண்டு கூட உலக சாம்பியனாக வரமுயற்சிக்கின்றோம். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் தற்போது தற்கொலை செய்து கொள்வதில் கூட உலக சாம்பியனாகத் திகழ்கின்றோம் என்பதுதான். இன்று தொலைத் தொடர்புச்சாதனங்கள் மூலம் கிடைக்கும் செய்திகளைப் பார்க்கும் போது தற்கொலை உணர்வு ஆசிய நாடுகளில் அதிலும் சிறப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிகரித்துவருவதை அவதானிக்கலாம்.

ரீன் - ஏஜ் பருவத்தினருக்கு தொடர்ச்சியாக ஏற்படும் மனச் சோர்வு, தீர்க்கப்படாத குழந்தைப் பருவப் பிரச்சனைகளும் தான் இத்தகைய உணர்வுகளுக்கு காரணம். பெற்றோருடன் ஏற்படும் சண்டைகள், நரகம் போன்ற பாடசாலை வாழ்க்கை, தனிமை, தாழ்வு மனப்பான்மை, நண்பர்கள் வெறுத்து ஒதுக்குதல் போன்ற பிரச்சனைகள் அதிகரிக்க அதிகரிக்க முதலில் “எதிர்ப்பு உணர்வு” தலைதூக்கும். பெற்றோரை ஆசிரிய ஆசிரியைகளை எதிர்க்கும்



இவர்கள் பிறகு “விலகிச் செல்ல” முற்படுவார்கள் வீட்டைவிட்டு ஓடுவது, பாடசாலைக்கு போகாமல் இருப்பது, பணித்தளத்திற்குச் செல்லாமல் இருப்பது போன்ற தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு



தலைதூக்க மன அழுத்தம் அதிகரிக்கின்றது. இதைத் தாங்க இயலாமல் தான் தற்கொலைக்கு முயற்சிக்கின்றார்கள். சற்று சிந்தித்துப் பார்ப்போம் எமக்கு ஒரு சிறிய வேதனையை வருத்தத்தை தாங்கிக் கொள்வது எவ்வளவு கடினம். சில வேளைகளில் எமக்கு ஏற்படும் வருத்தங்களினால் உயிர் ஆபத்து ஏற்படும் என்று அறிந்தால் எத்தனை ஆயிரம் ரூபாய்களைச் செலவழித்து வைத்தியரைச் சந்திக்கின்றோம். அவரது ஆலோசனையின்படி மருந்து மாத்திரைகளை வாங்கி உணவை விட மேலதிகமாக கரிசனையோடு உட்கொள்கின்றோம்.

காரணம் என்ன எம்மைப் பாதுகாக்க, எமது உயிரைப் பாதுகாக்க இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்வதற்காக இப்படியான சூழ்நிலையில் இந்த ரீன் - ஏஜ் பருவத்தினர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். என்பதை அறிந்து கொள்ளும்

## இளையோர் பக்கம் அங்கம் – 7

போது எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. எப்படி இந்த தைரியம், துணிவு, தன்னம்பிக்கை அவர்களுக்கு வந்தது என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்கின்றோம். ஆனால் இப்பருவ மாற்றத்தை நன்கு அறிந்து கொண்டோமே என்றால் நிச்சயமாக நாம் அவர்களுக்கு எம்மால் ஆன உதவிகளை வழங்கலாம்.

“ஏன் இந்த முறை O/L பரீட்சையில் இப்படியான பெறுபேற்றைப் பெற்றுள்ளாய்? கடைசி A/L படிப்பதற்கான தகுதியையாவது பெற்றிருக்கலாமே என்று கேட்டுத் திட்டினேன் அதற்கு சட்டென மண்ணெண்ணையை தலையில் ஊற்றித் தீயை வைத்துக் கொண்டாளே?”

“இந்த வருடம் சுற்றுலா, ரியூசன் வகுப்பு என்று எங்கும் போவது இல்லை ஒழுங்காக வீட்டுக்கு வா” பாடசாலையின் அருகே வீதியோரங்களிலே பஸ்ஸிலே அவனோடு, அவளோடு கதைக்காதே உன்னைப் பற்றி நிறையக் கேள்விப்படுகின்றேன். உண்மையைச் சொல் நீ யாரையும் விரும்புகின்றாயா? என்று கேட்டேன். இப்பொழுது படிப்பிலே கவனம் இல்லை ஏதோ யோசனையில் ஆழ்ந்து கொண்டிருக்கின்றான். ஒழுங்காகச் சாப்பிடுவது இல்லை. இம்முறை பரீட்சையில் கோட்டைவிட்டு விடுவானோ / விடுவாளோ தெரியாது”

எனது பிள்ளையிடம் ஏற்படும் சில மாற்றங்கள் அவதானித்து சில கேள்விகளைக் கேட்டேன். உண்மையைத் தெரிந்து கொள்ளவும் அவனது / அவளது பிரச்சனையில் இருந்து அவர்களைக் காப்பாற்ற ஆனால் பிளேட்டால் மணிக்கட்டை ஆழமாக வெட்டி இரத்தம் வெளியேறி இப்பொழுது வைத்திய சாலையில் வைத்திருக்கின்றோம். என நாளாந்தம் அங்கலாய்க்கும் பெற்றோரை, உறவினர்களைப் பெரியவர்களைப் பார்க்கின்றோம். என்ன... இந்த மாதிரிச் சின்னச் சின்ன விடயங்களுக்காக எமது பிள்ளைகள் இப்படிச் செய்யுமா? எனக்கேட்காதீர்கள். இவையெல்லாம் ஒட்டகத்தின் மீது வைக்கப்பட்ட கடைசி புல் மாதிரித்தான். நீறுபூத்த எரிமலைபோல இவர்கள் சீறுகிறார்கள் அவ்வளவுதான். ஒரு ஆறுதலான விடயம் பெரும்பான்மையான ரீன் - ஏஜ் பருவத்தினருக்கு நிறையப் பிரச்சனைகள் பாரமாக அழுத்தினாலும் தற்கொலை செய்யும் அளவுக்கு அவர்கள் கூடுதலாக் போவதில்லை என்பதுதான்

நிறைய மாணவ மாணவிகள் தங்களுக்கு அடிக்கடி கோபம் வருகின்றது. எப்பொழுதும் பதட்டமாக (Tension) இருக்கின்றது. சில சமயம் தற்கொலை செய்து கொள்ளலாம். என்ற உணர்வு வருகின்றது. இதிலிருந்து விடுபட என்ன வழி? என்று கேள்வி எழுப்புகின்றனர். இதற்குச் சுலபமான மேலோட்டமான Ready - made பதில்களைக் கூறிவிட்டுச் செல்ல எனக்கு விருப்பமில்லை. மாறாக இந்தக் கட்டுரையையும் இனிவரும் கட்டுரைகளையும் கவனமாகப் படித்து வந்தீர்கள் என்றால் உங்களைப் பற்றி நீங்களே நன்கு புரிந்துகொள்வீர்கள். நீங்கள் எழுப்புப் கேள்விகளுக்கும் பதில் உண்டு மாற்றமும் எளிதாகும்.




நான் யார்? நான் ஏன் இப்படி நடந்து கொள்கின்றேன்? ஏன் என்னைப் பற்றி சில சமயம் மிக உயர்வாகவும், சில சமயம் மிக மோசமாகவும் நினைக்கின்றேன்? ஏன் பலருக்கு என்னைப் பிடிக்கமாட்டேன் என்கிறது. என்ற கேள்விகள் ரீன் - ஏஜ் பருவத்தில் அடிக்கடி எழும். இதற்கு பதில் கண்டு படிக்காவிட்டால் இப்பிரச்சனைகள் 24 வயதிலும் தொடரும். இந்த கேள்விகளை நீங்கள் கேட்காவிட்டாலும் உங்களுடைய மனப்பான்மையும், நடை, உடை பாவனைகளும் உங்கள் மனதில் உள்ள போராட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும் எப்படி என்பதை தெரிந்துகொள்வோம்.

**இளையோருக்கான தேடல் தொடரும்....**

**இந்த நொடியை சந்தோசமாக வாழுங்கள் நிகழ்காலத்தை சந்தோசமாக வாழ்வது தான் வாழ்க்கையை இனிமையாக மாற்றும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "உடைகளை அல்ல, இதயத்தை கிழித்துக் கொண்டு திரும்பி வாருங்கள்"



உலகிலேயே மிகவும் நீளமான பயணம் என்பது மனிதன் தனக்குள் செல்கின்ற பயணமாகும். மனிதனின் சுய ஆய்வு பயணத்துக்கான காலமே, திரு அவை வழங்கியுள்ள அருளின் காலமான இந்த தவக்காலம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பாடுகளை மையப்படுத்தி மனமாற்றத்துக்கான காலமாக இதை கொண்டாடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் திருநீற்றுப்புதன் அன்று தொடங்கி நாற்பது நாட்கள் தவக்காலமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த காலம் நீண்ட நெடிய அர்த்தமுள்ள இறைவனை நோக்கிய பயணத்தை வலியுறுத்துகிறது.



திருவிவிலியத்தில் நோவா நாற்பது நாட்கள் இரவும் பகலும் மழை பெய்தது. பின் மக்களினம் உருவானது. இஸ்ரயேல் மக்கள் 40 ஆண்டுகளாக பாலைவனத்தில் கடவுளால் நெறிப்படுத்தப்பட்டனர். மோசே சீனாய் மலையில் 40 நாட்கள் தங்கியிருந்து திருச்சட்டம் பெற்றார். இயேசு அலகையால் சோதிக்கப்படும் முன் நாற்பது நாட்கள் நோன்பிருந்தார். தவக்காலத்தின் நாற்பது நாட்கள் என்பது மனம் வருந்தி மனமாற்றம் பெற்று இறைவனின் கொடைகளையும், வரங்களையும் பெறும் காலமாகும்.

கிறிஸ்தவர்கள் சாம்பல் திலகமிட்டு தவக்காலத்தை தொடங்குகின்றனர். சாம்பல் என்பது பாவத்துக்காக மனம் வருந்துவதையும், மனமாற்றத்தையும், நிலையாமையையும் நினைவூட்டுகிறது. தர்மம் செய்து பிறரன்பு செயலில் ஈடுபடுதல், வெளிவேடமற்ற இறை உறவிற்கு வழிவகுக்கும். செபம் பாவத்துக்காக மனம் வருந்தி மேற்கொள்ளும் நோன்பு ஆகியவை இக்காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய ஒழுங்கு முறைகள் ஆகும்.

மனிதனின் நிலையாமை, துன்பங்கள், பாவங்கள், கடவுளன்பு, மன்னிப்பு, செபம், நோன்பு பற்றி சிந்தித்து மனம்மாறி பாவக்கறைகளான கெட்ட நடத்தை, காமவெறி, பில்லி சூனியம், பகைமை, சண்டைசச்சரவு, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் வீண் பெருமை, ஒருவருக்கொருவர் எரிச்சல் மூட்டுதல், பொறாமை போன்றவற்றை தவிர்த்து தீய இதயத்தை கிழித்து தூயவர்களாக நல்லவர்களாக, நேர்மையானவர்களாக வாழ உறுதியெடுப்போம்

**தகவல்: இணையம்**

# தவக்காலமும் நாமும்



எத்தனை வருடங்கள்
புதிது வந்தாலும்
அத்தனையும் ஒரு
தவக்காலத்தை
தராமல் செல்வதில்லை
நாமும் பெறுவதில்லை
மனமாற்றத்தை
எல்லாமே வெளி
அடையாளத்தை
காட்டுகின்றோம்.

உபவாசம் இருக்கின்றோம் தினமும்
சைவ உணவையே நாடுகின்றோம்.
வெள்ளை, கறுப்பு, ஊதா
என்று
துக்க நிற ஆடைகளையே
அணிகின்றோம்.
சிலுவைப் பாதையையும்
மறப்பதில்லை
தவ முயற்சிகளையும் செய்கின்றோம்.



கூடவே. யாத்திரை வேறு
இவையெல்லாம் போதாதென்று
வீட்டில் செபமோ செபம்
எல்லாவற்றையும் பார்க்கும் ஆண்டவர்
உதட்டில் சிறு புன்னகை
நான் விரும்பும் ஒன்றை இன்னும்
நீ பெறவில்லையே!

என்பதே புன்னகையின் புதிர்.
இத்தனை செய்கின்றாய்!
ஆனந்தமடைகின்றேன் நான்.
அத்தனையும் உன்னை மாற்றவில்லையே!
என்பது ஆண்டவரின் கவலை
மனதில்.



பெறவேண்டிய மாற்றம்
ஒன்றை தொலைத்து விட்டு.
வெளிவேடக்காரரைப் போல்
வாழ முயற்சிப்பது தானே
வேடிக்கை
எம்மால் தவிர்க்கவே
முடியாது
என்கின்ற ஒன்றை
தவிர்த்தாலே
போதுமே.

அர்த்தமாகும் தவக்காலம்
வருங்காலம் வசந்தமாகும்
விண்ணுலகில் உண்டாகும் மகிழ்ச்சி
நம்மிடமிருந்து மாற்றமொன்றை
விரும்பும் இறைவன்,
அது மனமாற்றமாயின்
மகிழ்ந்தேயிருப்பார்.
முயற்சி செய்து பார்ப்போமா?
தவக்காலத்தை வசந்தமாக்குவோம்.

**கியூரி கிளாறிஸ்டன்**
**[இந்தியா]**

# மன்னிப்பே குணமளிக்கும் மருந்து



தவக்காலம் என்பது நம்மை புரிந்துகொள்ளும் காலம், இறை அருளைப்பெற ஒவ்வொருவரும் முயற்சி மேற்கொள்ளும் காலம். நமது வாழ்வில் கடந்த கால கசப்பான அனுபவங்களை நாம் எப்போதும் மனதிலே சுமந்து செல்வோம் என்றால் நம் மனதில் அமைதியை இழக்கின்றோம். அதனால் மனதில் தீராத கசப்புணர்வுகளும், காயங்களும் ஏற்படுகின்றது. எந்த மருந்தும் குணமாக்க முடியாத நோய்க்கு மன்னிப்பு ஒன்றுதான் மருந்து. அதை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நாம் புரிந்து கொள்வோம்.

மன்னிப்பு வெறும் உணர்வல்ல, மாறாக இறைத்தன்மை கொண்டது. கடவுள் கண்டிப்பானவர், நேர்மையானவர், நீதியானவர், உண்மையானவர் என்றாலும் அவர் இரக்கமும் அன்பும் கொண்டவர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பாவிகள் வழிதவறி போகும் போதெல்லாம் அவர்களைத் தேடிச்சென்று கிறிஸ்து எவ்வாறு மன்னிப்பு அளித்தாரோ, அதைபோலவே தான் நம்மைத்தேடி வந்து நமக்கு மன்னிப்பு அளித்து இயேசு புதுவாழ்வு தருகின்றார்.



நான் உனக்கு இரக்கம் காட்டியது போல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? மத் 18, 33 என்ற வார்த்தைகள் நம்மையும் மன்னிக்க அழைப்பு விடுக்கின்றது. நான் மன்னித்து விட்டேன் ஆனால் இன்னும் மறக்க முடியவில்லை என்பதற்கு நாம் மற்றவர்களை இன்னும் முழுமையாக மன்னிக்கவில்லை என்று தான் அர்த்தம். எனவே இத்தவக்காலத்தில் இறைவனின் இதயத்தைப் போலவே இரக்கமான இதயம் கொண்டவர்களாக வாழ்வோம். நிபந்தனையின்றி நாம் பிறரை மன்னிப்போம். நமது மன்னிப்பால் உடைந்த உறவுகளை புதுப்பிப்போம்.

**தகவல்: இணையம்**

# சபைகளைத் தேடிச் செல்வோர் விசுவாசக் கற்பை இழந்தவர்கள்

நாமும் நமது கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசம் கன்னிமையைப் பழுதறப் பாதுகாக்க வேண்டும். கிறிஸ்து நமது மணமகன் என்றும் அவர்முன் நாம் கற்புள்ள கன்னியாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் திருத்தூதர் பவுல் (2 கொரி 11:2) ஒருசில கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் போலிப்போதகர்கள் வலையில் சிக்கித் தங்களது விசுவாசக் கன்னிமையை இழந்து சபைகளை நோக்கிச் சென்றுகொண்டிருப்பது மிகவும் வேதனையளிக்கிறது.

ஓர் இளைஞன் ஒரு இளம் பெண்ணைக் காதலித்து, பிறகு அவளை விட்டுவிட்டு அவளின் தங்கையைக் காதலிக்க ஆரம்பித்தான். ஏன் அவன் அவ்வாறு மாறினான்? என்று அக்கா கேட்டபோது அவன்; "நான் என்ன செய்வது? உன்னைப் பார்த்த போது என்னை மறந்தேன் உன் தங்கையைப் பார்த்தபோது உன்னை மறந்தேன்" என்றான். அவன் ஒரு சந்தர்ப்பவாதக் காதலன்!

அவ்வாறே கத்தோலிக்கத் திருஅவையில் நீண்ட நெடுங்காலமாக இருந்தவர்கள்; போலிச் சபைகளின் போதகர்களின் மாயக்கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு, கத்தோலிக்கத் திருஅவையை விட்டுவிட்டு அப்போலிச் சபைகளில் சேர்கின்றனர். இவர்கள் யார்? என புனித பவுல் கூறுகிறார்: ஏவா பாம்பின் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டதைப்போல் தங்கள் எண்ணங்களைச் சீரழியவிட்டு, கிறிஸ்துவிடம் விளங்கிய நேர்மையையும் தூய்மையையும் இழந்துவிட்டவர்கள் (2 கொரி 11:3) பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், சிலர் தங்களுடைய விசுவாசக் கற்பை இழந்தவர்கள்!
இவர்களுக்காக செபிப்போம்

**தகவல்: இணையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைதியாய் இருப்பவன் முட்டாள் என்று எண்ணிவிடாதே. பேசுபவனை விட கேட்பவனே புத்திசாலி.**

வரலாற்றை ஆக்கியோர் – 06

# கௌதம புத்தர்



இந்தியாவின் அண்டை நாடாக உள்ள நேபாளத்தில் கௌதமா என்ற அரசருக்கும், மகாமாயா என்ற தம்பதிக்கும் கி.மு 563ம் ஆண்டு மகனாக பிறந்தார் என ஆராய்ச்சிகள் கூறுகின்றது. புத்தருக்கு அவரது பெற்றோர் இட்ட பெயர் சித்தார்த்தர். புத்தரின் எதிர்கால வாழ்க்கையில் அவர் பெரிய மகானாக மாறிவிடுவார் என்று ஞானி ஒருவர் குறிப்பிட்டமையால் அவரது தந்தை கௌதம புத்தரை வெளியுலக கஷ்டம், அழுத்தம், உழைப்பு போன்றவைகளை அவருக்கு ஏற்படுத்தமால் அரண்மனைக்குள்ளேயே அவரை வளர்த்தார். புத்தருக்கு 16வது வயதில் யசோதரா என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்தனர் அவர்களுக்கு ராகுலா என்ற ஒரு மகனும் பிறந்தான்.

புத்தர் பிறந்ததில் இருந்து அவருக்கு தேவைப்பட்ட அனைத்து விடயங்களும் அவருக்கு மிக எளிதாக கிடைத்தமையால் அவர் தனது வாழ்க்கைக்கான அர்த்தத்தினை அறிந்து கொள்ள விரும்பினார். எனவே அவர் தனது உதவியாளருடன் கோட்டையை விட்டு வெளியே சுற்றி பார்க்கச் சென்றார். அவர் வெளியே சென்று கவனித்தவைகள் "ஒரு வயதான தள்ளாடும் கிழவர், ஒரு நோயாளி, அழுகிக் கொண்டிருந்த ஒரு பிணம் மற்றும் ஒரு முனிவன்" முதல் மூன்றும் நிகழ்வுகளும் மக்கள் படும் துயரங்களை உணர்த்த நான்காவதாக அந்த முனிவரைக் கண்டதும் அவரின் அமைதியினை ரசித்தார். உலகில் ஏதும் நிரந்தரமில்லை ஆனால் அமைதி வேண்டும் என அவர் நினைத்தார். புத்தர் அரண்மனையை விட்டு வெளியேறினார். தாமும் கடும்தவத்தினை மேற்கொண்டால் வாழ்வின் அர்த்தம் புரியும் என நினைத்த புத்தர் பல நாட்கள் உணவு உண்ணாமல் நீர் அருந்தாமல் கடுந்தவம் புரிந்தார். அவரின் தவத்தினை கண்ட சிலர் அவருக்கு சீடர்களாகவும் மாறினார்கள். ஆனால் அப்போது கூட அவருக்கு விடை கிடைக்கவில்லை.

இவ்வாறு கடும்தவத்தினை மேற்கொண்டிருந்த புத்தர் ஒரு நாள் அவர் தவம் செய்துகொண்டிருந்த இடத்தினை கடந்து ஒரு இசை கலைஞன் சென்றான். இதனை கவனித்த புத்தர் தனது சீடனிடம் அந்த இசைக்கலைஞன் கொண்டு சென்ற யாழ் குறித்து கேட்டார். அதற்கு பதிலளித்த சீடன் அந்த யாழிலுள்ள நாணை இழுத்து கட்டினால் அது அறுத்து விடும். அதேபோன்று லேசாக கட்டினாலும் அதிலிருந்து இசை வராது என்று பதிலளித்தார். உடனே அவர் ஒரு விடயத்தினை நன்றாக புரிந்து கொண்டார். தான் சிறுவயது முதல் சுகத்திற்கு குறைவில்லாத ராஜவாழ்க்கையினை அனுபவித்தேன். இப்போது அதற்கு எதிர்மாறான உடலை வருத்தி தவவாழ்க்கையினை மேற்கொண்டுவருகிறேன் எனவே இந்த தவம் இருப்பதன் மூலம் நமக்கு விடை கிடைக்காது என்று உணர்ந்த புத்தர் தியானத்தில் தனது கவனத்தினை திருப்பினார்.

அவ்வாறு அவர் பிஹார் மாநிலத்தில் உள்ள "கயை" என்னுமிடத்தில் "போதி" மரத்தின் அடியில் பல நாட்கள் தியானம் செய்தார். அப்போது அவர் தேடுதலுக்கான பதில் கிடைத்தது. மேலும் தனக்கு ஞானம் கிடைத்ததையும் அவர் உணர்ந்தார். "ஆசையே துன்பத்திற்கு காரணம்" என்பதனையும் அறிந்து கொண்டார்.

அன்று உருவானதே இந்த புத்தமதம் இன்று வரை புத்தமதத்தினை உலகில் பல்வேறு நாடுகளில் உள்ள மக்கள் பின்பற்றி வருகின்றனர். கி.மு 483ஆம் ஆண்டு தனது சீடர் ஒருவர் மூலம் விஷம் கலக்கப்பட்ட ஒரு உணவினை உண்டு அவர் இறந்தார் என்று அவரை பற்றின ஆராய்ச்சி குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.


## திருநீற்றுப் புதன்

திருநீற்றுப் புதன் என்பது சாம்பல் புதன் என்றும், விபூதிப் புதன் என்றும் அழைக்கப்படுவதுண்டு இது நாற்பது நாள் நீடிக்கின்ற தவக்காலத்தின் முதல் நாள் இதுவே முன்னாள்களில் விபூதிப் புதன் என்றும் இப்பொழுது திருநீற்றுப் புதன் எனவும் வழங்கப்படுகின்றது. இந்நாளில் கிறிஸ்தவர்கள் புனிதப்படுத்தப்பட்ட சாம்பலைத் தம் மீது பூசிக் கொள்கிறார்கள். சாம்பல் தவத்திற்கும் தன்னொறுத்தலுக்கும் மன மாற்றத்திற்கும் அடையாளம். குருத்து ஞாயிறன்று வழங்கப்பட்ட குருத்தோலைகளை எரித்து சாம்பலாக்கிக் கோவிலில் வைப்பர். அங்கே வழிபாட்டின் போது அச்சாம்பல் மந்திரிக்கப்படும். அதைக் கிறிஸ்தவ குரு அல்லது திருத்தொண்டர் மக்களின் தலைமீது (நெற்றியில்) பூசுவார். வழக்கமாக சிலுவை அடையாளத்தில் இப்பூசுதல் இருக்கும். இவ்வாறு பூசும் போது குரு அல்லது திருத்தொண்டர் கீழ்வரும் சொற்களைக் கூறுவார். "மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" இவ்வாறு தவக்காலத்தின் முதல் நாள் திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகிறது.



## பெரிய வியாழன்

இயேசு சிலுவையில் அறையப்பட்டு துன்பங்கள் அனுபவித்து இறப்பதற்கு முந்தைய நாளில் தம்முடைய சீடர்களோடு இணைந்து இரவு உணவு அருந்தும் நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் நிகழ்ச்சியாக இந்த பெரிய வியாழன் அமைந்துள்ளது. இந்த பெரிய வியாழன் ஆண்டு தோறும் இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியை கொண்டாடுகிற ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தைய




ஆறு நாட்களை பரிசுத்த நாட்களாக கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்து அதில் இந்த பெரிய வியாழனையும் நினைவுகொள்கின்றனர். இப்படி இந்த பெரிய வியாழன் அன்று இயேசு மூன்று முக்கிய நிகழ்வுகளை ஏற்படுத்துகிறார்.

1. இயேசு இறுதி இரவுணவு அருந்தி நற்கருணையை ஏற்படுத்தல்
2. இயேசு தம் சீடர்களின் காலடிகளைக் கழுவுதல்
3. இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தல்

இவ்வாறு திருஅவையின் முக்கிய நாளாக பெரிய வியாழன் காணப்படுகிறது.

## பெரிய வெள்ளி

புனித வெள்ளி அல்லது பெரிய வெள்ளி அல்லது ஆண்டவருடைய திருப்பாடுகளின் வெள்ளி என்பது கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்து அனுபவித்த துன்பங்களையும் சிலுவைச் சாவையும் நினைவுகூர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகின்ற ஒரு விழா ஆகும். கிறிஸ்தவ வழிபாட்டு ஆண்டில் முக்கியமான நாளாக இது காணப்படுகின்றது. மிகப்பழமையான வழக்கப்படி புனித வெள்ளியன்று திருஅவையில் திருவருட்சாதனங்களைக் கொண்டாடுவதில்லை பீடத்தருகில் சிலுவை திரிகள் அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாயிருக்கும் இவ்வழிபாடு மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்



1. இறைவாக்கு வழிபாடு
2. சிலுவைக்கு வணக்கம் செலுத்துதல்
3. நற்கருணை விருந்து

இவ்வாறு பெரிய வெள்ளி வழிபாடுகள் நடைபெறுகின்றது.

## புனித சனி

புனித சனி என்பது புனித வாரத்தின் கடைசி நாளாகவும் தவக்காலத்தின் கடைசி நாளாகவும் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குத் தயாரிப்பு நாளாகவும் கருதப்படுகிறது. திருஅவையின் பழங்கால மரபிற்கேற்ப பெரிய சனி என்பது கிறிஸ்தவ மக்கள் தம் தலைவரும் ஆண்டவருமாகிய இயேசுவின் கல்லறையின் அருகே நின்று அவருடைய துன்பம் சாவு ஆகியவற்றைப் பற்றித் தியானிக்கின்ற நாள் ஆகும். இயேசுவின் இறப்பு துயர நிகழ்வாக இருந்தாலும் அத்துயரமானது மகிழ்ச்சியாக மாறப்போகிறது என்னும் நம்பிக்கையோடு திருஅவை காத்திருப்பது பெரிய சனியின் பண்பாகும். திருவழிபாட்டு முறைக்கு ஏற்ப பெரிய சனி பொழுது சாயும் வேளை வரை நீடிக்கும் அதன் பிறகு பாஸ்கா திருவிழிப்பு தொடங்கும். அதுவே இயேசு சாவினின்று எழுந்த நிகழ்ச்சிக்கு முன்னோடி போல அமைகிறது.




**நீ செய்த செயல்கள் ஒவ்வொன்றும் உன் நிழல் போல உன்னை தொடர்ந்துவந்து கொண்டே இருக்கும். அது நல்லதா இருந்தாலும் சரி கெட்டதாக இருந்தாலும் சரி**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

## அனைவரையும் நேசிப்போம்



ஓர் வார இறுதி விடுமுறைக்குப்பின் திங்கட்கிழமை காலை வகுப்பினுள் நுழைகிறார் ஆசிரியை சுமதி. அவருக்கு ஒரு வழக்கம் இருந்தது. அது வகுப்பறைக்குள் நுழைந்ததுமே love you all என்று சொல்வது தான், சொல்வது பொய்யென்று அவருக்கே தெரியும். ஆம், அந்த வகுப்பிலுள்ள ஒரே ஒரு மாணவனை மட்டும் அவரால் நேசிக்க முடியவில்லை. ஒழுங்காய் உடுத்தாத, எதிலுமே ஒழுங்காய் இல்லாமல் சுட்டிக்காட்டுவதற்கு எந்தவொரு சிறப்புத்தன்மை இல்லாத டெடி என்கிற தியோடர். அவனிடம் மட்டும் ஆசிரியை சுமதி நடந்து கொள்ளும் விதம் வித்தியாசமானது. எந்தவொரு தவறான விடயத்திற்கும் அவனையே உதாரணம் காட்டினார். எந்த நல்ல விடயத்திற்கும் அவனை நிராகரித்தார்.


அவ்வாண்டிற்கான காலாண்டுப் பரீட்சை வந்தது. முன்னேற்ற அறிக்கைகள் வகுப்பாசிரியர்களிடம் இருந்து தலைமை ஆசிரியரின் கையெழுத்திற்கு அனுப்பப்பட்டன. ரிப்போர்ட்டுகளை பார்வையிட்டு கையொப்பம் இட்டுக்கொண்டிருந்த தலைமை ஆசிரியர், ஆசிரியர் சுமதிக்கு அழைப்பு விடுத்தார். அவர் வந்ததும், “முன்னேற்ற அறிக்கை என்பது ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டும் தன் பிள்ளைக்கும் ஓர் எதிர்காலம் உண்டென்ற நம்பிக்கையை பெற்றோர்க்கு தரவேண்டும். நீங்கள் எழுதியிருப்பதை பார்க்கும் போது பெற்றோர் அவன் மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள்.” என்று தியோடரின் முன்னேற்ற அறிக்கையை சுட்டிக்காட்டி கூறினார். ஆசிரியர் சுமதியோ! என்னால் ஒன்றுமே செய்ய முடியாது அவனைப்பற்றி எழுதுவதற்கு என்னிடம் ஒரு நல்ல விஷயம் கூட இல்லை என்றார்.

தலைமை ஆசிரியர் அலுவலக ஊழியர் ஒருவரிடம் தியோடரின் கடந்தகால முன்னேற்ற அறிக்கைகளை கொண்டு வந்து சுமதியிடம் கொடுக்குமாறு பணித்தார். அறிக்கைகள் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு ஆண்டாய் விரித்துப் படிக்கிறார் சுமதி 3ம் வகுப்பு அறிக்கையில் வகுப்பில் மிகத்திறமையான மாணவன் தியோடர் என இருந்ததைக்கண்டு தான் வாசித்ததை நம்பமுடியாமல் அதிர்ச்சியடைந்தார் ஆசிரியர் சுமதி.



4 ஆம் ஆண்டு வகுப்பு அறிக்கை சொன்னது தியோடரின் தாய் புற்றுநோய் முற்றிய நிலையில் உள்ளார் அதனால் தியோடர் மீது முன்னர்போல அவரால் கவனம் செலுத்த முடியவில்லை. அதன் விளைவு அவனிடம் தெரிய ஆரம்பிக்கின்றது. 5 ஆம் ஆண்டு அறிக்கை இவ்வாறு சொன்னது தியோடரின் தாயார் இறந்து விட்டார். அவன்மேல் அக்கறைகாட்டும் உறவு தேவைப்படுகின்றது. இல்லையேல் நாம் அந்தக் குழந்தையை இழந்துவிடுவோம். கண்களில் கண்ணீருடன் சுமதி தலைமை ஆசிரியரைப் பார்த்து “என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியும்” என்று ஓர் உறுதியோடு கூறினார்.

அடுத்த திங்கட்கிழமை ஆசிரியர் சுமதி வகுப்பிற்குச் சென்று பிள்ளைகளைப் பார்த்து வழக்கம் போல் love you all என்றார். இம்முறையும் தாம் பொய் சொல்கிறோம் என்று அவருக்குத் தெரியும். ஏனென்றால் தற்போது மற்றக் குழந்தைகளை விட டெடி எனும் தியோடர் மீது அவரது அன்பு அளவுகடந்திருந்தது. தியோடருடரான தன் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதென்று அவர் தீர்மானித்திருந்தார். அதன் பின்னர் ஒவ்வொரு நல்ல விடயத்திற்கும் தியோடரின் பெயரானது உச்சரிக்கப்பட்டது. ஒவ்வொரு தவறான உதாரணங்களின் போதும் அவன் பெயர் கவனமாய் தவிர்க்கப்பட்டது. அவ்வாண்டின் பள்ளி இறுதிநாள் வந்தது எல்லா



மாணவர்களும் தம் ஆசிரியர்க்கென பரிசுகள் கொண்டு வந்திருந்தனர். அவற்றில் ஒரு பெட்டி மட்டும் ஓர் பழைய செய்தித்தாளால் சுற்றப்பட்டிருந்தது. ஆசிரியர் சுமதிக்கு அதைப் பார்த்ததுமே அது டெடியிடமிருந்து தான் வந்திருக்க வேண்டுமென உள்ளுணர்வு சொல்லியது. முதலில் அதையே பிரித்தார். பிரித்ததும் அதனுள் பாதி உபயோகித்த சென்ட் பாட்டில் ஒன்றும் சில கற்கள் கழன்று விழுந்த பிரேஸ்லெட் ஒன்றும் இருந்தது. அந்தப் பொருள் தியோடருடையது என்று புரிந்து கொண்ட முழு வகுப்பறையுமே சிரித்தது.

ஒன்றுமே சொல்லாமல் ஆசிரியர் சுமதி அந்த வாசனைத்திரவியத்தை தன்மீது பூசிக்கொண்டார். அந்த பிரேஸ்லெட்டை எடுத்து தன்கையில் அணிந்து கொண்டார். மெல்லியதாய் ஒரு புன்னகையுடன் தியோடர் சொன்னான் “இப்போது உங்களிடம் என் தாயின் வாசம் வருகிறது. இறக்கும் முன் அவர் இறுதியாய் வைத்திருந்த சென்ட் இதுதான். இந்த பிரேஸ்லெட் தான் பெட்டிக்குள் வைக்கும் முன் அவர் உடலில் இருந்து அகற்றப்பட்டது. ஓராண்டு கழிந்தது ஆசிரியர் சுமதி மேசையில் ஓர் கடிதம் கிடந்தது. “நான் சில ஆசிரியர்களை சந்தித்திருக்கின்றேன். ஆனால் நான் பார்த்த சிறந்த ஆசிரியர் நீங்கள் தான்” அன்புடன் டெடி. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஓர் கடிதம் கிடைத்தது. ஆண்டுகள் பல வேகமாய் உருண்டன. அவர்களுக்கிடையேயான தொடர்பு எப்படியோ அறுந்து போனது. ஆசிரியர் சுமதி ஓய்வுபெற்றிருந்தார்.

பல ஆண்டுகளின் பின்னர் அவருக்கு ஓர் கடிதம் வந்து சேர்ந்தது. டாக்டர் தியோடரிடமிருந்து... “நான் பார்த்த சிறந்த ஆசிரியரே! எனக்கு திருமணம் நடைபெறப்போகின்றது உங்கள் ஆசீருக்காக...” அத்துடன் போய்வர விமான டிக்கட்டுகளும் இணைக்கப்பட்டிருந்தன. ஆசிரியர் சுமதிக்கு இருப்பு கொள்ளவில்லை. அவரிடம் அந்த சென்பாட்டில் தற்போது இல்லை. பிரேஸ்லெட் பாதுகாப்பாய் இருந்தது. அதை அணிந்து கொண்டு திருமணத்திற்குப் புறப்பட்டார். அங்கு சென்றபின் இருக்கையொன்றில் அமரமுற்பட்டபோது அங்கு இருந்த ஊழியர்கள் அவரை எப்படியோ அடையாளம் கண்டு கொண்டு முன்வரிசையில் இருந்த ஆசனம் ஒன்றை நோக்கி அழைத்துச் சென்றனர். அவருக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் “அம்மா” என எழுதப்பட்டிருந்தது.

திருமணம் முடிந்தது தியோடர் தன் புது மனைவியிடம் ஆசிரியர் சுமதியை அறிமுகம் செய்து வைத்தார். “இவர் மட்டும் இல்லை என்றால் நான் இன்று இந்த இடத்தில் நின்றிருக்கவே முடியாது.” தியோடரின் கண்களில் கண்ணீர். ஆசிரியர் சுமதி தியோடரின் மனைவியைப் பார்த்து “டெடி இல்லை என்றால் ஒரு ஆசிரியர்தன் மாணவர்களுக்கு முதலில் ஒரு தாயாய் இருக்கவேண்டும் என்பதை நான் அறிந்து இருக்கவே முடியாது” இதைக்கூறிய ஆசிரியர் சுமதி Love you and God bless you எனக்கூறிவிட்டு மணமகன், மணமகளை ஆசீர்வதித்து விடைபெற்றார்.

இக்கதையைப் படித்த மரியாதைக்குரிய ஆசிரியர்களே!
உங்கள் வகுப்பிலும் டெடி இருக்கிறான். உங்கள் உதவிக்காக காத்துக் கொண்டிருக்கிறான். உங்களாலும் அந்த ஆசிரியர் சுமதியாக இருக்க முடியும். இனி அடுத்த திங்கட்கிழமை காலை வகுப்பறைக்குள் நுழையும் போது ஒரு ஆசிரியராய் இல்லாமல் தாயாய்/தந்தையாய் நுழைந்து பாருங்கள் உங்களால் ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் நல்லதோர் மாற்றம் இருக்க முடியும்.

தொகுப்பு:
Miss. A. Ann poustina
St. Mary's Cathedral

**வாழ்க்கை என்றாலே துன்பங்களும் துயரங்களும் இருக்கத் தான் செய்யும் அது தான் நியதி என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்**

noolaham.org | aavanaham.org

# புனித லூக்கா நற்செய்தி 17 – 20 அதிகாரங்கள்

- எல்லோரும் பங்குபற்றலாம்
- போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது
- அதிர்ஸ்டசாலி குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுகள் முறையே 1ம் பரிசு 500/= 2ம் பரிசு 300/= 3ம் பரிசு 200/=

**கேள்வி பதில்**

1. திருத்தூதர்கள் ஆண்டவரிடம் என்ன கேட்டார்கள்?

விடை:........................................

2. பத்து தொழுநோயாளர்களும் இயேசுவை நோக்கி எவ்வாறு குரலெழுப்பி வேண்டினார்கள்?

விடை:........................................

3. இறையாட்சி எப்போது வரும் என இயேசுவிடம் கேட்டவர்கள் யார்?

விடை:........................................

4. "இயேசுவே! தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" என யார் கூக்குரலிட்டது?

விடை:........................................

5. கோவிலில் கற்பித்து வந்த இயேசுவை யார் ஒழித்துவிட திட்டம் தீட்டினார்கள்?

விடை:........................................

**சரி, பிழை எழுதுக.**

6. நோவாவின் காலத்தில் நடந்தது போலவே மானிட மகனுடைய காலத்திலும் நடக்கும்? ( )

7. மனந்தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்பதற்கு இயேசு நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் பற்றிய உவமையைசொன்னார். ( )

8. செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதை விட ஊசியின் காதில் சிங்கம் நுழைவது எளிது. ( )

9. மக்கள் யோவானை இறைவாக்கினர் என்று உறுதியாய் நம்பியிருந்தனர். ( )

10. ஆரோன் ஆண்டவரை ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் கடவுள் என்று கூறியிருக்கின்றார் ( )

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

11. நான் ____________ என்று சொல்வாரானால் அவரை ____________ விடுங்கள்.

12. எழுந்து செல்லும் உமது ____________ உமக்கு ____________ என்றார்.

13. பிணம் எங்கே ____________ அங்கேயே ____________ வந்து கூடும் என்றார்.

14. நல்ல போதகரே ____________ உரிமையாக்கிக் கொள்ள ____________ என்ன செய்ய வேண்டும்.

........

15. நான் உம் ____________ உமக்குக் கால் ____________ வரை நீர் என் ____________ வீற்றிரும்.

பெயர் :........................................

முகவரி :........................................

பங்கு :........................................

முடிவுத்திகதி 31.05.2023

# ஹாய் குட்டீஸ் திருவிவிலிய புதிர் போட்டி – 53 நீதிமொழிகள் 16 – 31 அதிகாரங்கள்

1. ஆண்டவர் பொல்லா மனிதரை எதற்கென்று குறித்து வைத்திருக்கின்றார்?

விடை:........................................

2. ஏழையை ஏளனம் செய்கிறவர்கள் யாரை இகழ்கிறார்கள்?

விடை:........................................

3. உணர்வுள்ளவர் மனமும் ஞானமுள்ளவர் செவியும் என்ன செய்யும்?

விடை:........................................

4. திருக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கிறவர் தம்மை என்ன செய்து கொள்கிறார்?

விடை:........................................

5. எவர் களங்கமற்ற நேர்மையான வாழ்க்கை நடத்துகிறாரோ அவருடைய பிள்ளைகள் எதை பெற்றுக் கொள்கிறார்கள்?

விடை:........................................

6. பலி செலுத்துவதை விட மனிதனின் எச்செயல் ஆண்டவருக்கு உவப்பளிக்கும்?

விடை:........................................

7. தாழ்மையுள்ளவர்களுக்கும், ஆண்டவரிடம் அச்சம் உடையவர்களுக்கும் கிடைக்கும் பயன் என்ன?

விடை:........................................

8. தொலைவிடத்திலிருந்து வரும் நற்செய்தி எதற்கு ஒப்பாகும்?

விடை:........................................

9. பிறருடைய சச்சரவுகளில் தலையிடுகிறவர் எதற்கு ஒப்பாவர்?

விடை:........................................

10. தம் தலைவரைக் காத்துப் பேணுகிறவருக்கு எது கிடைக்கும்?

விடை:........................................

11. ஒரு நாட்டில் அறிவும் விவேகமும் உள்ள தலைவர்கள் இருந்தால் எது நிலைத்திருக்கும்?

விடை:........................................

12. முறைகேடாய் நடக்கும் செல்வரை விட யார் மேலானவர்கள்?

விடை:........................................

13. பெற்றோரின் பொருளைத் திருடிவிட்டு "அது குற்றமில்லை" என்று சொல்பவர் யாரை விட கேடுகெட்டவர்?

விடை:........................................

14. மக்களின் சினத்தை தணிப்பவர்கள் யாவர்?

விடை:........................................

15. மாசாவின் அரசராக இருந்தவர் யார்?

விடை:........................................

பெயர் :........................................

முகவரி :........................................

தரம் :........................................

பங்கு :........................................

முடிவுத்திகதி 31.05.2023


**யாரிடம் குறைவான ஆசைகளும், மன அமைதியும் உள்ளதோ அவர்கள் கவலையின்றி வாழ்கிறார்கள்.**

noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி

## படத்திலுள்ள 05 வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





பாலர் முதல் தரம் 05 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01ற்கு மாத்திரம் நிறந்தீட்டி படம் 02 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்
போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது
1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு – 500/- 2ம் பரிசு – 300/- 3ம் பரிசு – 200/-

பெயர் :......................................................

முகவரி :......................................................

தரம் :......................................................

பங்கு :......................................................

முடிவுத்திகதி 31.05.2023

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி முடிவுகள் – 41
## நீதிமொழிகள் ( 1 – 3 ) வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந | ன் | மொ | ழி | க | ள் | | கு | சி | ன் |
| ல் | ப | ய | ய் | செ | ணை | து | ர | ஞ் | மோ |
| லா | ற் | | உ | | ஞா | ர் | லெ | அ | ல |
| ரி | றி | ல் | ழ | க | ன | பா | ழு | கு | சா |
| ன் | க் | வி | ல் | க் | த் | ப் | ப் | க் | ன் |
| நெ | கொ | றி | வீ | ய் | தை | ரு | பு | ரு | ல |
| றி | ள் | ய | ர் | சா | நா | தி | கி | வ | ப |
| | வோ | ய் | க | வி | டி | த் | ன் | ட | ற் |
| | ர் | மெ | ள் | செ | | லை | ற | ண் | த |
| ன் | ல | ந | ன | யா | லை | நி | து | ஆ | மு |

1ம் பரிசு 500/= ரூபா
தேனுகி கிரிதரன்
இல. 70/33, யாட் அப்ரோச் வீதி
திருகோணமலை
புனித மரியாள் பேராலயம்

2ம் பரிசு 300/= ரூபா
யோ. டிவேஞ்சன்
இல. 676, அன்புவழிபுரம்
புனித சதாசகாய அன்னை ஆலயம்

3ம் பரிசு 200/= ரூபா
யுவான் ஜெரமி
இல. 225/1, உட்துறைமுக வீதி
குழந்தை இயேசு ஆலயம்



## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்



**பங்குபற்றியவர்கள் ~ 15 சிறார்கள்**
**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/= ரூபா
லீ. புமேஷியன்
இக்பால் வீதி
மூதூர் – 07
புனித அந்தோனியார் ஆலயம்

2ம் பரிசு 300/= ரூபா
பா. கேதுசன்
1ம் வட்டாரம்
சல்லி சாம்பல்தீவு
இறைஇரக்க திருத்தலம்

3ம் பரிசு 200/= ரூபா
டரோன் ரொபட்
இல. 34, லவண்டர் லேன்
புனித மரியாள் பேராலயம்



## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி ~ 51
## திருப்பாடல் 121 ~ 150

**பங்குபற்றியவர்கள் : 29 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர்: 24 குட்டீஸ்**



1ம் பரிசு 500/= ரூபா
S. தனுசிஹா
மாங்காயூற்று
கிறிஸ்து அரசர் ஆலயம்

2ம் பரிசு 300/= ரூபா
சு. ஷாதேஸ்
இல. 529/31, ஏகாம்பர வீதி
புனித குவாடலூப்பே அன்னை ஆலயம்

3ம் பரிசு 200/= ரூபா
தி. ருக்ஷிக்கா
இல. 170/7
இறைஇரக்க திருத்தலம்

## புனித லூக்கா நற்செய்தி
## அதிகாரம் 09 – 12

**பங்குபற்றியவர்கள் ~ 35 பேர்**
**மிகச் சரியாக விடையளித்தோர்: 22 பேர்**

1ம் பரிசு 500/= ரூபா
N. அஷ்வந்த்
கோபாலபுரம்
நிலாவெளி
புனித சூசையப்பர் ஆலயம்

2ம் பரிசு 300/= ரூபா
கே. லிவோன்
இல. 755, பொற்கேணி
தம்பலகமம்
புனித பாத்திமா அன்னை ஆலயம்




3ம் பரிசு 200/= ரூபா
R. சர்மிளா
இல. 529/31, ஏகாம்பர வீதி
புனித குவாடலூப்பே அன்னை ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வில் நிலையான ஒரே விடயம் மாற்றம் மட்டுமே என்பதை நினைவில்கொள்ளுங்கள்.**

# மறைக்கல்வி நடுநிலைய நிகழ்வுகள்

மறைக்கல்வி நடுநிலைய முந்நாள் இயக்குனராக பணியாற்றிச் சென்ற அருட்பணி. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளாருக்கான நன்றி பாராட்டுதல் நிகழ்வு 11.02.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் புதிய இயக்குரான அருட்பணி. அ. அ. றொஹான் பேர்ணார்ட் அவர்களின் வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது.





மறைக்கல்வி நடுநிலை இயக்குனர் அருட்பணி. அ. அ. றொஹான் பேர்ணார்ட் அடிகளாரின் பிறந்தநாள் கொண்டாட்டம் 07.03.2023 அன்று மறைக்கல்வி நடுநிலைய ஊழியரகளால் சிறப்பிக்கப்பட்டது.







25.01.2023 அன்று மறைக்கல்வி நடுநிலையத்தால் நடாத்தப்பட்ட மறையாசிரியர்களுக்காக பிரயோகப் பரீட்சையில் தமிழ் மற்றும் சிங்களப் பிரிவில் இருந்து மூன்று மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.



## 15.02.2023 அன்று திருப்பாலத்துவசபை தினத்தை முன்னிட்டு சாம்பல்தீவு திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு





## புனித வனத்து அந்தோனியார் ஆலயம் செல்வநாயகபுரம்

செல்வநாயகபுரம் புனித வனத்து அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவானது 2023 தை 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி J. சுதர்ஷன் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 29ஆம் திகதி காலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலியானது நடைபெற்று இனிதே நிறைவடைந்தது.



## குழந்தை இயேசு ஆலயம் உவர்மலை

உவர்மலை குழந்தை இயேசு ஆலயத்தின் வருடாந்த திருவிழாவானது 2023 தை 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பங்குத்தந்தை அருட்பணி X.I. ரஜீவா அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 5ஆம் திகதி காலை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலியானது நடைபெற்று இனிதே நிறைவடைந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org